DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**CC.No. 123/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 2 | Caste | : | |
| Name | : | முத்துமாரி | Age | : | |
| FN. | : | சசிகுமார் | Occupation | : | |
| Village | : | சேராந்தை | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 29th day of September 2022.
29.09.2022.

முதல் விசாரணை:-

1. நான் சேராந்தையில் வசித்து வருகிறேன். மருத்துவமனையில் கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். மணிகண்டன் என்பவரை எனக்கு தெரியாது. இந்த வழக்கின் இறந்து போன சசிக்குமார் எனது கணவராவார். கடந்த 22.09.2019-ம் தேதி சம்பவம் நடத்து எனக்கு தெரியாது. காலை 11 மணிக்கு எங்கள் ஊரை சேர்ந்த கனி என்பவர் என்னிடம் நேரில் வந்து சொன்னார். கனி என்பவருக்கு போன் மூலம் தகவல் வந்தது அதைகேட்டு கனி என்னிடம் சசிகுமார் யார் என்று கேட்டார் எனத கணவர் என்று சொன்னேன்.

2. எத்தனை சசிகுமார் இருக்கிறார், என் கணவர் சசிகுமார் வேலைக்கு சென்ற இடத்தில் விபத்து ஏற்பட்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொன்னார். அதன் பேரில் நான் அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது என் கணவர் இறந்துவிட்டதாக சொல்லி மூடி வைத்திருந்தார்கள். ஆம்புலன்ஸ் ஓட்டுனர் என் கணவரை புகைப்படத்தை என்னிடம் காட்டினார் அதில் என் கணவரின் தலை நசங்கி கண்கள் வெளியே தெரிந்தது.

3. விபத்திற்கு முன்பாக என் கணவர் வேலைக்கு செல்வதற்காக அ.சா1னுடன் காலை 8 மணிக்கு சென்றார். போலீசார் என்னை விசாரித்து என் கணவரின் உடம்பை நல்லடக்கம் செய்ய தந்தபோது என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. என்னை போலீசார் விசாரிக்கும் போது கனி என்பவர் நேராக வந்து என்னிடம் தகவல் சொன்னதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். ஆம்புலன்சில் கொண்டு போகும்போது போட்டோ

எடுத்து வாட்சப்பில் போட்டு விட்டார் என்பதை பேரலீசில் சொல்லியுள்ளேனா என்றால சொல்லவில்லை. நான் பிரைமரி ஹெல்த் சென்டரில் 12000 தெகுப்பு ஊதியம் பெற்று வேலை செய்து வருகிறேன் என்றால் இல்லை 4000 தான் வாங்குகிறேன். அந்த பிரைமரி ஹல்த் சென்டர் வாலிநோக்கத்தில் உள்ளது.

2. அன்றைய தினம் நான் பணிக்கு போய்விட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். பொதுவாக பிரைமரி ஹெல்த் சென்டர் எத்தனை மணிக்கு திறப்பார்கள் என்றால் 24 மணி நேரமும் திறந்துதான் இருக்கும். அன்றைய தினம் எனக்கு இரவு நேரப் பணியாகும். பிரைமரி ஹெல்த் சென்டரில் வருகைப் பதிவேட்டைப் பார்த்தால் நான் அன்று எத்தனை மணிக்கு பணிக்கு சென்றேன் என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக அன்றைய தினம் பிரைமரி ஹெல்த் சென்டரில் இரவு பணி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3. நான் இரவு பணிக்கு சென்றதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அன்றைய தினம் நான் இரவு பணிக்கு போகவில்லை அதனால் தான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் போனேன்.

4. எங்கள் ஊரில் இருந்து தங்கச்சிமடத்திற்கு எவ்வளவு துாரம் என்றால் தெரியாது. நான் இன்று எங்கள் ஊரில் இருந்து எத்தனை மணிக்கு கிளம்பினேன் என்றால் 9 மணிக்கு கிளம்பினேன். இரண்டு பஸ் மாறி வந்தேன்.

5. அன்று எனது கணவர் பணிக்கு காலை 8 மணிக்கு கிளம்பினாரா என்றால் அன்று எங்கள் ஊரில் திருவிழாவிற்கு பேசிக்கொண்டிருந்தார்கள் அதனால் கிளம்புவதற்கு லேட் ஆகிவிட்டது. அ.சா.1 னின் பைகில் செல்வதாக சொல்லிவிட்டு சென்றார். இந்த விபரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. எனது கணவர் சசிகுமாருக்கு வண்டி ஓட்ட தெரியும்.

6. எனது கணவர் வண்டி ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் வைத்துள்ளாரா என்றால் இல்லை. எனது கணவர் இறந்ததற்கு விபத்து இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். விபத்து இழப்பீடு பெறுவதற்காக பொய்யாக தகவலை சொல்லி போலீசுடன் கூட்டு சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னை போலீசார் பிரைமரி ஹெல்த் சென்டரில் வைத்து தான் விசாரித்தார்கள். சம்பவம் நடந்த இடம் எனக்கு தெரியாது. சம்பவம் எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது. வண்டியோ, வேனோ அடித்தது என்று சொன்னார்கள். எனது கணவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் ஆம்புலன்சில் ஏற்றி சென்ற போலீசார் சொன்னார்.

7. போலீசார் என்னை விசாரிக்கும் போது எனது கணவரும், அ.சா.1 னும் தங்கச்சிமடத்திற்கு தான் வேலைக்கு சொன்றார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவரும்,

வேல்முருகனும் குடித்துவிட்டு விபத்து ஏற்படுத்தினார்கள் நான் பிரைமரி ஹெல்த் சென்டரில் வேலை பார்ப்பதால் மருத்துவரை வைத்து போதையை நீக்கிவிட்டோம் என்றால் சரியல்ல.

8. பொதுவாக எனது கணவர் வேலைக்கு போய்விட்டு வந்து இரவு குடிப்பார். அன்று நடந்த விபத்திற்கு எனது கணவர் மற்றும் ஜெயமுருகன் போதைதான் காரணம் என்றால் சரிதான். சம்பவத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.